தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

# கரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(20.12.2023 முதல் 24.12.2023)

அறிக்கைஎண்: 101/2023 தேதி : 19.12.2023

## கரூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 30 - 31 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 23 - 24 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கா மழை பெறப்பட்டது.

## கரூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (20.12.2023 முதல் 24.12.2023).

| கடந்தவாரவானிலை (15.12.2023 முதல் 18.12.2023) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (20.12.2023 முதல் 24.12.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 15/12 | நாள்-2 16/12 | நாள்-3 17/12 | நாள்-4 18/12 | தேதி | நாள்-1 20/12 | நாள்-2 21/12 | நாள்-3 22/12 | நாள்-4 23/12 | நாள்-5 24/12 |
| 0.0 | 0.0 | 0.2 | 1.4 | மழை (மி.மீ.) | 4 | 1 | 1 | 0 | 0 |
| 31 | 30 | 30 | 30 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 28 | 28 | 27 | 28 | 29 |
| 24 | 23 | 24 | 24 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 24 | 24 | 23 | 24 | 24 |
| 6 | 7 | 7 | 7 | மேகமூட்டம் (ஆக்டா) | 6 | 7 | 6 | 6 | 5 |
| 74-74 | 86-95 | 87-78 | 85-76 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90-70 | 90-60 | 90-50 | 90-50 | 80-60 |
| 19 | 9 | 19 | 13 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 16 | 16 | 14 | 16 | 14 |
| வட வட கிழக்கு | வட வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | காற்றின் திசை | வட வட கிழக்கு | வட வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட வட கிழக்கு |

## கரூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 20.12.2023 முதல் 22.12.2023 லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 27 – 29 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23 - 24 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 - 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 - 70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 14 – 16 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் வட வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | வடிகால் வாய்க்கால்களை தூர்வாரி பன்னை குட்டையுடன் முறையாக இணைத்து மழை நீரை சேமிக்கவும். |

| | | |
|---|---|---|
| நெல்<br>. | நடவு வயல்<br>. | தற்போது நிலவும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலை சுருட்டுப்புழுக்களின் அறிகுறிகள் (சுருண்ட இலைகள், வெள்ளையான சுரண்டப்பட்ட இலைகள்) குறிப்பிட்ட அளவில் தென்பட்டால், மழை நின்ற பின் கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 50% SP @400 கிராம் அல்லது புளுபெண்டிமைட் 20 % WG @ 50 கிராம் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளிக்கவும். |
| | | தற்போது நிலவும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் ஆனைக்கொம்பன் ஈ தாக்கம் பரவலாக தென்படுகிறது. இதனால் பயிரின் குருத்துப் பகுதி வெங்காயத் தாள் போல் மாறி கதிர்கள் வெளிவராது. இதன் பரவலை தடுக்க மழை நின்ற பின் பைப்ரினில் 0.3 G @ 7 கிலோ / ஏக்கர் அல்லது குளோரான்ட்ரானிலிப்ரோல் குருனை யை 0.4 w/w @ 4 கிலோ ஒரு ஏக்கருக்கு இடவும். |
| வாழை | | வாழை மரங்கள் காற்று மற்றும் மழையால் சாயாமல் இருக்க, வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| கால்நடைகளுக்கு | ஆடு மற்றும் மாடு | கன்றுகள் மற்றும் ஆட்டுகுட்டிகளை மேட்டுபாங்கான பகுதியில் மழை சாரல் படாமல் பாதுகாக்கவும். |

## குறுஞ்செய்தி

வடிகால் வாய்க்கால்களை தூர்வாரி பண்னை குட்டையுடன் முறையாக இணைத்து மழை நீரை சேமிக்கவும்.

.

**இயக்குநர்**